31

அடையாளம்

தான் செய்யும் தொழில் போலீசிடமிருந்து கடுமையான தண்டனையைப் பெற்றுத்தரும் என்ற நினைவே அகன்றிருந்த போது, பிரச்சினை திரும்ப முளைத்து விட்டது. இம்முறை அவ்வளவு எளிதாக அது தீர்ந்து விடாது என்று திவாகருக்குத் தோன்றியது. தினமும் பிற்பகல் ஹைதராபாத் எக்ஸ்பிரஸில் தொடங்கி இரவு பெங்களூர் மெயில் வரை, சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் மூன்று நான்கு வண்டிகளிலாவது அவனுடைய அழுக்குத் துண்டுகள் ரிசர்வ் செய்யப்படாத பெட்டிகளின் மேல் தட்டுகளில் கிடக்கும். வண்டி கிளம்புவதற்கு இரண்டு மூன்று மணி நேரத்திற்கு முன்னால் அது எங்கோ ஸ்டேஷனிலிருந்து வெகுதூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். வண்டியை உள்ளேயும், வெளியேயும் கழுவிச் சுத்தம் செய்து, ஒவ்வொரு கதவையும் பூட்டியும் வைத்திருப்பார்கள். போர்ட்டர் சபேசனிடமிருந்து சாவி வாங்கி வந்து, திவாகர் ரயில் வண்டியில் அவன் துண்டு போட்டிருக்கும் பெட்டியில் ஏறிப் படுத்துக் கொள்வான். ரயில்வே பாதுகாப்புப் படைக்காரர்கள் கண்ணில் படாமல் குறைந்தது ஒரு மணி நேரமாவது இருட்டில் ரயில் பெட்டியில் ஒளிந்து கொண்டிருக்க வேண்டும். வண்டியை பிளாட்பாரத்துக்கு எடுத்து வந்தவுடன் சபேசன் ஏதாவது பயணிகளை பிடித்து வருவான். ஆளுக்கு மூன்று, நான்கு, ஐந்து ரூபாய்க் கூடக் கிடைக்கும். இதுதான் கடந்த இரு வருடங்களாக நடந்து வருகிறது. இனி முடியாது போலிருக்கிறது.

திவாகர் சென்ட்ரல் ரயில் நிலையத்தையொட்டிச் செல்லும் ஒத்தைவாடைச் சாலையில் பத்மனாபனைத் தேடிப் போனான். கேரளத்திலிருந்து வருபவர்கள் சாதாரணமாக டீக்கடைதான் வைப்பார்கள். ஆனால் பத்மனாபன் மனைவி தமிழ்க்காரி. அவள் ஓர் இட்லிக் கடையை நடத்த, பத்மனாபன் பக்கத்துத் தெருவில் இருக்கும் ஒரு விடுதியில் மானேஜருக்கு உதவியாளனாக இருந்தான்.

வெளியூரிலிருந்து சென்னைக்கு வருபவர்களை திவாகர் முதலில் பத்மனாபனிடம்தான் அழைத்து வருவான். இதனால்

அந்த விடுதிக்காரர், பத்மனாபன், திவாகர் மூவருக்கும் பயன் உண்டு.

"என்ன ஒரு மாதிரியா இருக்கே?" என்று பத்மனாபன் திவாகரைக் கேட்டான்.

"புது ஸ்டேஷன் சூப்பிரண்ட் ரொம்பத் தொல்லை பிடிச்சவனாயிருப்பான் போலிருக்கு..."

"எல்லோரும் புதுசா வரப்போ இப்படித்தான் கெடுபிடி பண்ணுவாங்க. அப்புறம் எல்லாம் சரியாப் போயிடும்!"

"இங்கே மைக்கேல் மேலே கேஸ் போட்டு உள்ளேயே தள்ளிட்டாங்க."

"நீயும் கூடத்தான் இரண்டு தரம் உள்ளே போயிட்டு வந்திருக்கே..."

"அதெல்லாம் ரெண்டு நாள்—ஒரு வாரம்தான். இந்த வாட்டி மைக்கேலை மூணுமாசம் தீட்டிவிட்டாங்க!"

"மூணுமாசமா?"

"ஆமாம். மூணு மாசம்."

விடுதி அறை ஒன்றைக் காலி பண்ணிவிட்டு ஒருவர் பத்மனாபனிடம் சாவியைக் கொடுக்க வந்தார். பத்மனாபன் ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தைப் புரட்டியபடி, "என்னிக்கு வந்தீங்க?" என்றான்.

"நேத்து" என்றார் அவர். திவாகரைப் பார்த்து, "இந்த ஆள்தானே இங்கே கொண்டு விட்டது" என்றார்.

"மூணு ரூபா இருந்தா தாருங்க. பத்து ரூபாயா தரேன்" என்று பத்மனாபன் சொன்னான்.

"அதெப்படி? இருபத்தஞ்சு ரூபா வாங்கிண்டீங்களே?"

"இரண்டு நாள் கணக்கு, சார்! அப்புறம் சர்வீஸ் சார்ஜ். அதை ஒரு நாளைக்குத்தான் போட்டிருக்கேன்."

"ஏன் அதை இரண்டு நாள் போட்டுட்டு ரூம் வாடகையை ஒரு நாளாக்கறது?"

"அதெப்படி சார்?"

"நீ என்னவாவது பண்ணித் தொலை!" அந்த மனிதர் முன் பணம் கட்டியிருந்ததில் பாக்கி இருந்ததை வாங்கிக் கொண்டு வெளியே போனார். பத்மனாபன் திவாகரிடம் ஒரு ரூபாய் தந்தான். "ரெண்டு ரூபாதானேப்பா?" என்று திவாகர்கேட்டான்.

"ஓ... ரெண்டு நாளா?" என்று சொல்லிவிட்டுப் பத்மனாபன் இன்னொரு ரூபாயைத் தந்தான். அப்படியே அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்த சபேசனைப் பார்த்து, "ஓ... குரு!" கூப்பிட்டான்.

சபேசன் திரும்பிப் பார்த்தான். பத்மனாபனுடன் திவாகரும் இருப்பதைக் கண்டு விடுதியினுள் நுழைந்தான். "மாமனும்

மச்சானும் காலையிலேயே எங்கே கொள்ளையடிக்கத் திட்டம் போட்டிருக்கீங்க?" என்றான்.

பத்மனாபன் இந்தக் கேள்வியைப் பொருட்படுத்தவில்லை.

"மைக்கேலுக்கு மூணுமாசமா கொடுத்திருக்காங்க?" என்று கேட்டான்.

"அதான் நேத்தே இந்தத் தெலுங்குப் பய கிட்டேச் சொல்லிட்டேனே... இனிமே யார்டிலேயே இடம் பிடிக்கிறது எல்லாம் முடியாது."

"மாமூலைக் கொஞ்சம் கூட்டிக்கிறது."

"முடியாது நாயரே! நேத்து செவன் டவுன் வண்டீலே மட்டும் முப்பது துண்டை எடுத்துட்டுப் போயிட்டாங்க... நம்ம தெலுங்கு பையன்து கூட இருக்கு. மாட்டிண்டா இரண்டு மாசம், மூணு மாசம் நிச்சயமாக உள்ளே தள்ளிடுவாங்க!"

"அப்போ, இந்தப் பையனுக்கு என்னதான் வழி?"

"நான் போன வருஷமே காங்கிமென்னா சேத்துடறேன்னு சொன்னேன். இவனுக்கு மெட்ராஸ் இட்லியும், மெட்ராஸ் சினிமாவும் பிடிச்சுப் போயிடுத்து... காங்கிமேன்னா எல்லா இடத்துக்கும்தான் போகணும்... பத்து நாள், பதினைஞ்சு நாள் எங்கேயோ காட்டிலேயும், மேட்டிலேயும் இருந்துதான் ஆகணும். துண்டு வைச்சே பொழைச்சுக்கறேன்னு சொன்னான். இப்போ துண்டே போயிடுத்து!"—இதைச் சொல்லிவிட்டு சபேசன் கிளம்பி விட்டான்.

பத்மனாபன் மேஜை டிராயரை இழுத்துப் பூட்டினான். திவாகரிடம், "ஒரு பத்து நிமிடம் இங்கேயே இரு; இதோ வந்துடறேன்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

திவாகர் ஒரு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டான். அதை வரவேற்பு அறை என்பதைவிட, வெளியே ஓடிப் போகத் தூண்டும் இடைவழி என்று அழைப்பதுதான் பொருந்தும். அந்த வரவேற்பு அறைக்கு ஏற்றபடிதான் விடுதியில் அறைகளும் இருக்கும். ஆனால் அதைவிட வசதியான இடத்திற்கு திவாகர் போன்றவனின் சிபாரிசு தேவைப்படுமா?

அந்த விடுதிக்குக்கூட அவன் சிபாரிசு தேவையில்லை என்று தெரிவிப்பதுபோல, முரட்டுத் துணியில் ஜிப்பா—பஞ்ச கச்சம் வேஷ்டி அணிந்தவர் ஒருவர் தடிச்சுருட்டு ஒன்றைப் புகைத்துக் கொண்டு பெட்டி படுக்கையுடன், மனைவி கைகுழந்தையுடன் அந்த விடுதி வரவேற்பறையில் நுழைந்தார். அந்தக் குறுகலான இடைவழியில் அவர்களைத் தாண்டி வெளியே செல்ல முடியாது என்பதை உணர்ந்த திவாகர், தலை குனிந்து ஏதோ வேலையில் ஈடுபட்டிருப்பது போல மேஜைக்குப் பின்னால் ஒடுங்கினான். வந்தவர் தெலுங்கில்,"ரூம் இருக்கிறதா?" என்று கேட்டார்.

திவாகர் தலைகுனிந்தபடியே, "இருக்கிறது. மானேஜர் வெளியே போயிருக்கிறார்'' என்று தெலுங்கிலேயே பதில் சொன்னான்.

சுருட்டுக்காரர் ஒரு கணம் திவாகரை உற்றுப் பார்த்தார். "டேய்!" என்றார்.

திவாகர் தலை நிமிர்ந்தான்.

''இங்கே என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?'' என்று சுருட்டுக்காரர் தெலுங்கில் அதட்டினார். அப்போது பத்மனாபன் வந்துவிட்டான். சுருட்டுக்காரன் திவாகரை மிரட்டுவது கண்டு அவனும் கலவரம் அடைந்தவனாக, "என்ன விஷயம்?" என்றான்.

"மானேஜர் எங்கே?" — அவர் தெலுங்கில் கேட்டார்.

"நான்தான் உதவி மானேஜர்" பத்மனாபன் தமிழில் பதில் சொன்னான்.

''இந்தப் பையன் யாரு?'' என்று அவர் தெலுங்கில் கேட்டார்.

அது புரியாமல் பத்மனாபன் திவாகரிடம், "என்னடா சொல்றாரு?" என்று கேட்டான்.

அவன் பதில் சொல்வதற்குள் அந்த மனிதர் தெலுங்கில், "இந்தப் பையன் வீட்டைவிட்டு இங்கே ஓடி வந்திருக்கிறான்... எவ்வளவு நாட்களாக இங்கே இருக்கிறான்?" என்று கேட்டார்.

பத்மனாபன் விழித்தான்.

சுருட்டுக்காரருடைய மனைவி, "உங்கம்மா சாகக்கிடக்கிறாள். நீ இங்கே நிம்மதியாகச் சுற்றிக் கொண்டிருக்கிறாயே...." என்றாள்.

திவாகர், "எனக்கு அம்மா கிம்மா யாரும் கிடையாது!" என்று அவளிடம் சொன்னான்.

"ஐயயோ! அடப்பாவி! அவளானால் மகனே மகனே என்று நாளெல்லாம் கதறிக்கொண்டு இருக்கிறாள். நீ இப்படிப் பேசுகிறாயே? நிம்மதியாகத் தூங்க முடியுதா? உங்கம்மா நெஞ்சு வேகுமா?" என்று தெலுங்கில் ஒரு பாட்டுப் பாடுவது போலக் கேட்டாள்.

பத்மனாபன் திவாகரைக் கடுமையாகப் பார்த்தான். 'என்னடா விஷயம்?" என்று கேட்டான்.

பத்மனாபன் ஒரு ரூம் சாவி எடுத்து "நீங்க என்கூட வாங்க!" என்றான். அக்குடும்பம் திவாகரைத் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் உள்ளே போயிற்று.

ஐந்து நிமிடத்திற்குப் பிறகு பத்மனாபன் வரவேற்பறை மேஜையருகே வந்தான். திவாகரைப் பார்த்து மீண்டும், "என்னடா ஆச்சு?" என்றான்.

"அவங்க எங்க ஊர்க்காரங்க..."

"அதனால?"

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம்..." இப்படிச் சொல்லி விட்டுத் திவாகர் கண்ணீர்விடத் தொடங்கினான்.

"உனக்கு யாரும் இல்லைன்னு சொன்னியே?"

"அம்மா, அக்கா, தம்பி, தங்கையெல்லாம் இருக்காங்க. நான்தான் ஓடி வந்துட்டேன்."

"ஏண்டா?"

"அப்பா, அம்மாவை விட்டுட்டுப் போயிட்டாரு."

திவாகர் அழுது கொண்டிருந்தான். பத்மனாபன் சொன்னான் "நானும் என் அம்மாவை விட்டுத்தான் மெட்ராஸ் வந்தேன். அப்பா ஓடிட்டார்னு இல்லை! அம்மாவுக்கே சோத்துக்கு வழியில்லாதப்போ, எனக்கும் சேர்த்து அவளைத் திண்டாட வைக்க வேண்டாமேன்னுதான்."

பத்மனாபன் திவாகரின் தோள் மீது கை வைத்து தட்டிக் கொடுத்தான்.

"பாவம்; அப்பா—அம்மா யாருமே இல்லாத பசங்க ரயில்லே துண்டு போட்டுப் பொழைக்க வந்தாங்கன்னா அவுங் களுக்குப் போட்டியா, உன் மாதிரி ஆளுங்களும் வரலாமா?"

திவாகர் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

"கையிலே ஏதாவது காசு வைச்சிருக்கியா?" என்று பத்மனாபன் கேட்டான்.

திவாகர் சட்டைப் பையிலிருந்து இரண்டு ரூபாயை எடுத்துக் காண்பித்தான்.

"இது இப்ப நான் கொடுத்தது... வேற ஏதாவது வச்சி ருக்கியா?"

"போர்ட்டர்கிட்டே பத்து ரூபா இருக்கும்!"

"உன் ஊர் எது?"

"ஹைதராபாத் பக்கத்தில ஒரு சின்ன கிராமம்."

"நீ பேசாம ஊருக்குப் போயிடு."

'முடியாது' என்று திவாகர் தலையை ஆட்டினான்.

"இன்னி ராத்திரியேகூட உன்னை போலீஸ் பிடிச்சுண்டு போய் இரண்டு மூணு மாசம் உள்ளே தள்ளிடும்... சபேசனே சொல்றான், இனிமே துண்டு போடறதெல்லாம் ரொம்பக் கஷ்டம் என்று... நீ இங்கே எங்கேன்னு கூலி வேலைக்குப் போய் எப்படி

பொழைக்கப் போறே? நான் சொல்றதைக் கேளு. பேசாம ஊரைத் தேடிண்டு போ!"

''இந்த மூஞ்சியை வைச்சுண்டு யார் மூஞ்சியிலே முழிக்கிறது?"

"உன் அம்மா மூஞ்சியிலே முழிக்கிறதுக்கு உனக்கு வேற மூஞ்சி வேணுமா? ஜெயிலுக்குப் போனாப் புது மூஞ்சி வரும். சரிதானா?'' திவாகர் பேசாமல் நின்றான். அப்போது விடுதி மானேஜர் வந்தார். பத்மனாபன் அவரிடம் மேஜை டிராயரைத் திறந்து சாவி, பணம், சில காகிதங்களை எடுத்துக் கொடுத்தான்.

திவாகர் சாலைக்குச் சென்று காத்திருந்தான்.

சபேசன் வந்தான். "உன் மச்சான் என்ன சொல்றாரு?" என்று திவாகரைக் கேட்டான்.

"திரும்பி ஊருக்குப் போகச் சொல்றாரு."

"ஊருக்குப் போயி என்ன பண்ணுவே?"

"அம்மா இருக்காங்க..."

"நீ அவளுக்கு சோறு போடுவியா? அவ உனக்குச் சோறு போடுவாளா?"

திவாகர் பதில் சொல்வதற்குள் பத்மனாபனும் சாலைக்கு வந்து விட்டான். "நான் செல்லம் கிட்ட சொல்லி, ஒரு இருபது ரூவா வாங்கித் தரேன். நீ ஒரு இருவது ரூவா கொடு. இந்த மனவாடுவை அவன் ஊருக்கு அனுப்பிடலாம்!'' என்று பத்மனாபன் சபேசனிடம் சொன்னான். செல்லம் அவனுடைய மனைவியின் பெயர்.

சபேசன் கிளம்பிப் போய்விட்டான். பத்மனாபனும், திவாகரும் செல்லத்தின் கடைக்கு வந்து இட்லி சாப்பிட்டார்கள். பத்மனாபன் சொன்னான்: "இதோ பார், பணத்தை வாங்கிண்டு மறுபடியும் துண்டு போடப் போகாதே. ஒழுங்கா டிக்கெட் வாங்கிட்டு ஊரைப் பார்க்கப் போய்ச் சேரு!"

இருவரும் இட்லியை விழுங்கிவிட்டுக் கை கழுவிக் கொண்டார்கள். பத்மநாபன் கேட்டான்:

"ஆமாம்; அந்தப் பெரியவரு வந்தாரே— உங்க ஊர்க்காரரு... யார் அவரு?"

திவாகர் பதில் சொல்லவில்லை. பத்மனாபன் மீண்டும் கேட்டான்: "யார்ரா... அது?"

"எங்க அம்மா அவர் கூடத்தான் வாழ்ந்தாங்க!"

"அப்படீன்னா...?"

சிறிது மௌனத்திற்குப் பிறகு திவாகர் பதில் சொன்னான்: "அதுதான் எங்க அப்பா!"

1985